# <u>பகுதி III - கடவுள் நேரம்</u>

## <u>தேவனின் பரிசுத்த பிரசன்னத்தில் பிரார்த்தனைகளை ஏறெடுத்து வழிபடும் நேரம்,</u>

### <u>தேவனுடைய கவசத்தை(சர்வாயுதத்தை) அணிந்து கொள்ளுங்கள்:</u>

உங்கள் தினசரி காலை கடன்களில் வழக்கமான ஒரு பகுதியாக இந்த பிராத்தனைகளை செய்யுங்கள்.

<<< ஒவ்வொரு நாளும் ஏற்படும் ஆவிகுறிய சவால்களை எதிர்கொள்ள இந்த ஜெபங்கள் தேவனின் பலத்திலும், மற்றும் சக்தியிலும் உங்களை தயார்படுத்துகிறது. >>>

அன்பார்ந்த ஆண்டவரே, நான் இன்று படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது ஒரு போர்க்களத்தில் காலெடுத்து வைக்கிறேன் என்று எனக்கு தெரியும். நான் உறுதியாக நிற்க எனக்கு தேவையான எல்லாவற்றையும் அளித்திருக்கிறீர் என்று எனக்கு தெரியும்.

எனவே உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினால், நான் தேவனின் படைக்கலங்களை **<u>(கவசத்தை/சர்வாயுதத்தை)</u>** அணிந்துக் கொள்கிறென்:

முதலில், நான் என் தலையில் இரட்சிப்பின் தலைகவசத்தை (ஹெல்மெட்) வைக்கிறேன். தயவு கூர்ந்து என் மனதயும், என் சிந்தனைகளையும் பாதுகாத்துக் கொள்ளவும். பாவம் நுழைய அனுமதிக்காமல் என் கண்களை பாதுகாத்து கொள்ளும்.

நீதி என்னும் மார்கவசம், என் இதயத்தையும், என் உணர்வுகளையும் பாதுகாக்கட்டும். நான் என் உணர்வுகளால் ஆளுகை செய்யப்படாமல் சத்தியத்தினால் ஆளுகை செய்யப்பட வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

உம்முடைய வார்த்தையாகிய இடை கச்சையாக அணிந்துக் கொள்கிறேன். பிழைகளிலிருந்து என்னை காப்பாற்றும்.

என் அடிகளுக்கு வழிகாட்ட சமாதானம் என்னும் பாதரட்சைகளை (காலனி / செருப்பு) போட்டுக்கொள்கிறேன். தயவு கூர்ந்து சத்தியத்தில் என் பாதங்களை நிலைக்க செய்யும். நான் தாக்குதல்களை எதிர்த்து உறுதியோடு நிற்க எனக்கு அதிகாரத்தை தந்தருளும்.

அடுத்து, நம்பிக்கை என்னும் கவசத்தை நான் எடுத்து கொள்கிறேன். ஆண்டவரே, தயவு செய்து சாத்தானின் தீ போன்ற அம்புகளில் இருந்து என்னைக் காப்பாற்றும். பிசாசின் திட்டங்களை எதிர்க்க உம்முடைய இராணுவத்துடன் தோளோடு தோளாக நிற்க வைக்கவும்.

இறுதியாக, உம்முடைய பரிசுத்த வார்த்தைகளை ஆவியின் வாளாக எடுத்து கொள்கிறேன். மற்றவர்களுடன் உமது சத்தியத்தை பகிர்ந்து கொள்ளவும் தாக்குதல்களை திசைதிருப்ப தயாராக இருக்கவும், புதிய, ஊக்குவிக்கும் முறைகளில் வேதாகமத்தை வாசிக்வும், ஆண்டவரே தயவு செய்து எனக்கு உதவுங்கள்.

இன்று நான் எதிப்புகளை சந்திப்பேன் என்று தெரியும். ஆண்டவரே நான் உறுதியாய் நிற்க எனக்கு சக்தி அளித்திருக்கிறீர். ஆண்டவரே இனறைய போராட்ட்திற்க்குறிய பெலத்தை தந்தருளும்.

ஆண்டவருக்குள் மகிழ்சியாய் இருப்பதே என் பெலன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

<u>வேதம் குறிப்பு</u> **<u>(எபேசியர் 6: 13-18)</u>**

**<u>ஆண்டவரிடம் நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:</u>**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

<u>வேதம் குறிப்பு</u> **<u>(மத்தேயு 6: 9-13)</u>**

**<u>ஆண்டவரின் பாதுகாப்புக்காக ஏறெடுக்கும் பிரார்த்தனை</u>**

***"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.***

***நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.***

***அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.***

***அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.***

***இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,***

*இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.*

*உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.*

*உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.*

*எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்.*

*ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.*

*உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.*

*உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.*

*சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்.*

*அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.*

*அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.*

*நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.”*

வேதம் குறிப்பு **(சங்கீதம் 91)**

தேவன் நமக்கு வழங்குபவர் (அவர் நம்முடைய தேவைகளைக் பூர்த்தி செய்கிறவர் )

*“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.*

*அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.*

*அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.*

*நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.*

*என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.*

*என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். "*

வேதம் குறிப்பு **(சங்கீதம் 23)**

**மூன்றாம் (3) ஆம் மணி பிராத்தனை**

இயேசுவே நீர் மரித்தீர் ஆனால் ஆத்துமாக்களுக்காக ஜீவ ஊற்று பீறிட்டு பாய்ந்தது.

கருணை கடல் உலகம் முழுவதும் திறந்தது.

ஓ ஜீவ ஊற்றே! புரிந்து கொள்ள முடியாத தெய்வீக கருணையே !

உலகம் முழுவதையும் சூழ்ந்து கொள்ளும். எம்மேல் உம்மை முழுவதுமாக ஊற்றும்.

எங்களுக்காக கருணையின் ஊற்றாக

இயேசுவின் இதயத்திலிருந்து பீறிட்ட நீரே, இரத்தமே

நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம்.

பரிசுத தேவனே, பரிசுத்தமும் வல்லவருமானவரே, பரிசுத்தமும் அநாதியுமானவரே எங்களுக்கும், உலகில் எல்லாவற்றிர்க்கும் இரங்கும். (3 முறை)

கர்த்தராகிய இயேசுவே, கருணையின் ராஜாவே , நாங்கள் உம்மை நம்புகிறோம்!

ஆமென்.

**தேவனின் வழிகாட்டலுக்கு கோரிக்கை**

ஆண்டவரே, நான் எடுக்க வேண்டிய முடிவுகளுக்காக எனக்கு வழிகாட்டியருளும். என் வாழ்க்கையில் உங்கள் சித்தத்தை நாடுகிறேன். என் முழு இருதயத்தோடு உம்மை விசுவாசிக்கிறேன். சுயபுத்தியின்மேல் சாயாமல் நான் செய்யும் எல்லாவற்றிலும் உம் சித்தத்தை நாடுகிறேன். ஆண்டவரே எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை நீர் காட்டுவீர் என்று நான் அறிவேன்.

ஆண்டவரே, உம்முடைய பரிசுத்த பிரசன்னத்தில் அமைதியாக இருக்க எனக்கு கற்றுதாரும். உம் மென்மையான குரலை நான் கேட்கும் படி எனக்கு போதிதருளும். உமது போதனைகளை கடைப்பிடித்து, உமக்கு கீழ்படிந்து இருக்கும்படி என்னை ஆசீர்வதியும். , ஆண்டவரே உமது வார்த்தையின்படியும் உமது சித்தத்தின்படியும் எனக்கு ஆகட்டும்.

நான் உமக்கு கீழ்ப்படிந்து, என்றும் உங்கள் வழிமுறைகளை பின்பற்றி கொண்டே இருக்க வேண்டும்.

பிதாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே நான் பிராத்திக்கிறேன். ஆமென்.

வேதம் குறிப்பு **(நீதிமொழிகள் 3: 5-6)**

## தவிப்பு, பதற்றம் கவலையை மேற்க்கொள்ள பிரார்த்தனை

எல்லாம் வல்ல தேவனே, நான் ஜெபத்தால் உம்மண்டை வருகிறேன். எனக்கு என்ன நடக்கிறது என்று உமக்குத் தெரியும். நான் கவலையும் பதட்டமாகவும் இருக்கிறேன். ஆண்டவரே நான் பதட்டமாக தவிப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை என்று எனக்கு தெரியும்.

நீர் எல்லாம் வல்லவர், சக்தி வாய்ந்தவர் மற்றும் அன்பானவர் என்று எனக்கு தெரியும். நான் உம்மிடம் சமாதானத்திற்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் வருகிறேன். ஆண்டவரே என்னை போன்ற சுமையோடு சோர்வுற்று இருப்பவர்களையும் சேர்த்து உம் எல்லா பிள்ளைகளையும் உம்முடைய பிரசன்னத்திற்கு அழைக்கிறீர். உம்மில் இளைப்பாறுதல் உண்டு என்ற வாகுறுதியை நான் அறிவேன்.

ஆண்டவரே நீர் என் மேல் அக்கறை உள்ளவராய் இருப்பதினாலே என் கவலைகள், பதட்டங்களை உம்மிடம் கொடுத்து விடுகிறேன். நன்றி ஆண்டவரே. நீர் மிகவும் மென்மையும் தாழ்மையுமான இருதயம் கொண்டவர். உம்மிடம் இளைப்பாறுதல் அடைவேன்.

இந்த உலகத்தில் என்னை போன்ற சூழ்நிலைகளில் உள்ள, நீர் நேசிக்கும் பிள்ளைகள் அனைவருக்காகவும் என் ஜெபத்தை ஏறெடுக்கிறேன். உம்முடைய சமாதானத்தால் எங்களை ஆசீர்வதியும்.

அப்பா, இந்த ஜெபத்தை மிக வல்லமை உள்ள இயேசுவின் நாமத்தினாலே கேட்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (மத்தேயு 11: 28-30, 1 பேதுரு 5: 7)**

## குணமளிக்கும் பிரார்த்தனை

எல்லாம் வல்ல தேவனே நீர் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர். நீர் சக்தியும் கருணையும் உடையவர். வானத்திலும் பூமியிலும் உள்ள சகல அதிகாரமும் உம்முடையவைகள்.

அன்பான தேவனே, நீர் கிருபையுள்ள தேவன். எங்கள் அனைவருக்கும் ஜீவனைக் கொடுத்தவர். நீர் எங்கள் மீட்பர்., எங்கள் நோயிலிருந்தும் கவலையிலிருந்தும் குணமாக்கும் சக்தியும், அதிகாரமும் உம் கைகளிலும் இருக்கிறது.

நீர் எவ்வளவு அன்பும் கருணையும் உடையவர்! உம் மகனாகிய இயேசு கிறிஸ்துவை, எங்கள் இரட்சகராக தந்தீர். அவருடைய குணமாக்குகின்ற தழும்புகளினாலும், பரிசுத்த இரத்தத்தினாலும், எங்கள் பாவங்களும் நோய்களும் சிலுவையிலே கழுவப்பட்டது. நாங்கள் குணமாக்கப்பட்டோம்!.

ஆண்டவரே, எனது எல்லா பலவீனத்தையும், பாவங்களை உம்மிடம் அறிக்கையிடுகிறேன். தேவனே என்னை மன்னியும். நீர் இல்லாமல் நான் ஒன்றுமில்லை. உம்முடைய கிருபையினால் மட்டுமே நான் குணமாகிறேன். நீர் அற்புதங்களின் ஆண்டவர். வல்லமையும், அன்பும், இரக்கமும் உள்ள உம்முடைய பெலத்தை நம்பி இருக்கிறேன். என்னை மன்னித்து எனக்கு குணமாளித்தீர். ஆண்டவரே, எனக்கு ஒரு தூய்மையான (சுத்தமான) புதிய இதயத்தை கொடுத்ததற்கு நன்றி. ஆண்டவரே, எனக்கு உமது சமாதானத்தையும் அளித்ததற்கு நன்றி. தயவு செய்து என்னோடு எப்போதும் இருக்கவும். நீர் இம்மானுவல் (தேவன் நம்முடன் இருக்கிறார்)

நீரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறீர். நீர் என் வாழ்வில் ஒளியாய் இருக்கிறீர். உமது அன்பால் இரட்சிக்கப்பட்டேன். ஆண்டவரே உமது விலை ஏறப்பட்ட பரிசுத்த இரத்தத்தினால் என்னை முழுவதுமாக மூடிக் கொள்ளும்.

கர்த்தராகிய இயேசுவே என்னை உமக்கு கிட்டி சேர்த்துக் கொள்ளும். நான் உம்முடைய வல்லமை மிகுந்த பெலத்தை நம்பியிருக்கிறேன். நீர் என் இரட்சகர், என்னை குணப்படுத்துபவர், என்னை பாதுகாப்பவர், என் அடைக்கலம். நீர் என் ஆண்டவர்.

கர்த்தராகிய இயேசுவே உமக்கு என் தேவைகள், ஆசைகள், மற்றும் என்னை, பற்றி எல்லாம் தெரியும். உமது வலிமை மிக்க பரிசுத்த கைகளில், என்னை ஒப்புவிக்கிறேன். உம் சித்தம் போல் எனக்கு ஆகக்கடவது. நான் உம்முடையவள்/ன். நான் இரட்சிக்கபட்டேன், குணமடைந்தேன்.

அப்பா பிதாவே, நான் உமது கிருபையும் ஆசீர்வாதமமும் தேவைப் படுகிற என் எல்லா சகோதர சகோதரிகளுக்கும் பிராத்தனை செய்கிறேன். எனது எல்லா பிராதனைகளையும் நான் இயேசுவின் வல்லமை உள்ள நாமதிலே கேட்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (ஏசாயா 53: 5, சங்கீதம் 103: 1-5, ஜான்14: 6)**

**<u>கெட்ட எண்ணங்கள் மற்றும் பழக்கத்தையும் தேவனுடைய வல்லமையிலும் அதிகாரத்திலும் வெளி ஆக்குதல்</u>**

அன்புள்ள ஆண்டவரே! உம் கிருபையும் ஆசீர்வாதமும் என்மேல் இருக்கிறது என்று அறிவேன். உம்முடைய கண்களுக்கு தகுதியில்லாத கெட்ட எண்ணங்களினாலும், பழக்கத்தினாலும் அவதிபட்டு வருகிறேன். இந்த கெட்ட எண்ணங்கள், பழக்கங்களை எறிந்துவிட விரும்புகிறேன்.

எதுவும், எந்த வழியிலும் என்னை சேதப்படுதாதபடிக்கு, எனக்கு பாம்புகளையும் தேள்களையும், எதிரியின் எல்லா அந்தகார சக்தியையும் மிதிக்கும் அதிகாரம் கொடுத்ததற்காக உமக்கு நன்றி. எனவே, இயேசுவின் வல்லமை உள்ள நாமதிலே இந்த கெட்ட எண்ணங்கள் பழக்கங்கள் என்னை விட்டு இப்போதே விலக கட்டளையிடுகிறேன். ஆண்டவரே, உமது விலை மிக்க இரத்தத்தால் என்னை கழுவி பாவங்கள் இல்லாதபடி என்னைச் சுத்திகரியும். உம் கிருபையினாலும் இரக்கத்தினாலும் என்னை நிரப்பும். உமது பரிசுத்த நாமத்தைப் மேன்மைபடுத்தி மகிமை படுத்தி நான் வாழ வேண்டுகிறேன். இயேசுவின் வல்லமை உள்ள நாமதிலே இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (லூக்கா 10: 19)**

**<u>சமாதானத்திற்காக பிராத்தனை</u>**

ஆண்டவரே, என் இதயதிலே கலக்கமாக இருக்கிறது. எனக்கு சமாதானம் இல்லை. நான் என் மனதை திசைதிருப்ப முயன்றும் குழப்பமான எண்ணங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. கர்த்தராகிய இயேசுவே உம் எல்லா பிள்ளைகளுக்கும் உம்முடைய சமாதானத்தை உறுதியளித்து இருக்கிறீர். “***சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக***”.என்று கூறி இருக்கிறீர்.

கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய வாக்குறுதியை விசுவாசிக்கிறேன். நான் உம்மை நம்புகிறேன். என்னுடன் எப்போதும் இருப்பதற்காக கர்த்தாவே உமக்கு நன்றி. உம்முடைய பரிசுத்தநாமத்துக்கு ஸ்தோத்திரம். நீர் என் மேல் அக்கறையாய் இருப்பதாலே என் கவலைகள் எல்லாவற்றையும் உம்மிடம் ஒப்படைக்கிறேன். உம் சமாதானம் என் மேல் இருக்கிறது என்று நம்புகிறேன். உம் சமாதானம்எனக்குள் கிரியை செய்கிறது. உம் சமாதானம் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட்து. உமக்கு நன்றி ஆண்டவரே.

ஆண்டவரே, எண்ணங்களால் உம்மையே நாடி உம்மை நம்புகிற அனைவரையும் பூரண சமாதானத்துடன் வைத்துக் கொள்வீர் என்று தெரியும். ஆண்டவரே, . நான் உம்மையே நம்பியிருக்கிறேன். நீர் எங்கள் நித்திய பர்வதமாயும் (மலை) நித்திய பலமுமாய் இருக்கிறீர். நான் சமாதானத்தோடு படுத்து உறங்குவேன் ஏனெனில் உம்மால் மட்டுமே என்னை பாதுகாக்க முடியும்.

தங்கள் இதயத்தில் சமாதானம் இல்லாத உம் எல்லா பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறேன். உமது சமாதானம் அவர்கள் இதயங்களை தொட்டு அவர்களுக்கு ஆறுதல் அளிக்கட்டும். அப்பா, இயேசுவின் வல்லமை உள்ள நாமத்திலே இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன். ஆமென்.

வேதம் குறிப்பு **(யோவான் 14: 27,சங்கீதம் 4: 8, ஏசாயா 26: 3- 4, 1 பேதுரு 5: 7, பிலி 4: 6-7)**

## ஒருவரின் சொந்த தவறுகள், பாவங்களுக்காக தேவனிடம் மன்னிப்பு கேட்பதற்குப் பிராத்தனை

எங்களை நேசிக்கிற பரம பிதாவே , உமது பரிசுத்த சன்னதியில் உமது பாதபடியில் அமர(உட்கார) எனக்கு அனுமதித்தாரும். நான் என் எண்ணங்களினாலும், வார்த்தைகளினாலும், செயல்களினாலும் , செய்த எல்லா பாவங்களையும் நீர் மன்னிக்க வேண்டுகிறேன்.

[நீ செய்த எல்லா பாவங்களுக்கும் மற்றும் தவறுகளுக்கும் மன்னிப்பு கேளுங்கள்:

நீங்க்கள் சிறு குழந்தையாக இருந்த போது -

இளம் வயதில் -

உங்கள் வேலை ஸ்தலத்தில் / பள்ளி / அலுவலகம்

உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் உங்கள் உறவுகள்

உங்கள் உறவினர்களுடன் மற்றும் நண்பர்களுடன் உங்கள் உறவுகள்

மற்றவர்களுடன் உங்கள் உறவுகள்

ஆண்டவரிடம் நீங்கள் செய்த எல்லா தவறுகளையும் ஒப்புக்கொடுத்து மன்னிப்பு கேளுங்கள்.]

ஆண்டவரே, என் இதயத்தில் பதுங்கி இருக்கும் எல்லா பாவங்களையும் நான் எப்படி அறிவேன்? தன் சொந்த பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை மன்னியும். என் மறைவான குற்றங்களிலிருந்து என்னை சுத்திகரியும். தேவனே வேண்டுமென்றே பாவம் செய்வதிலிருந்து என்னை விலக்கி வையுங்கள். அவைகள் என்னை கட்டுப்படுத்த விட வேண்டாம். அப்பொழுது நான் குற்றங்க்களிலிருந்து விடுபட்டு பெரும் பாவத்திலிருந்து விடுதலை ஆவேன்.

நான் இயேசு கிறிஸ்து என் இரட்சகர் என்று ஒப்பு கொள்வதினால், நான் பாவம் செய்தும் உமது கிருபையால் என் பாவங்கள் கழுவபட்டன. அவர் என் பாவங்கள், என் நோய்களிலிருந்து விடுவிக்க இந்த உலக்குக்கு வந்தார்.

அவரது கிருபையினாலும் நமக்காக சிலுவையிலே மரித்ததினாலும் நான் உம்மை என் அப்பா (பிதாவே) என்று அழைக்க முடிகிறது.

கர்த்தாவே, நீர் மிகவும் சக்தி வாய்ந்தவரும் அன்பானவருமாய் இருக்கிறீர். நீர் நினிவே நகரத்து மக்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்ட போது

அவர்களை, விடுவித்து காப்பாற்றினீர். கர்த்தாவே நீர் கிருபையும் இரக்கமும் உள்ளவர், நீடிய பொறுமையும், மகாதயையும் கொண்டவர்.

தயவு செய்து என் இதயத்தையும் என் மனதையும் பரிசுத்தப்படுத்தி, சுத்திகரியும். நான் செய்த பாவங்களை எனக்கு மன்னியும். இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் என்னை கழுவி சுத்திகரியும். நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன், உம்முடைய வல்லமையுள்ள பரிசுத்த நாமத்தை துதிக்கிறேன்..

என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உங்கள் பார்வைக்கு ஏற்றதாக இருக்கட்டும். கர்த்தாவே, நீர் என் பெலன் என் மீட்பர். என்னை மன்னித்து உம்முடைய சமாதானம், அன்பு மற்றும் சந்தோஷத்தால் என்னை ஆசீர்வதியும். என் குடும்பத்தையும் ஆசீர்வதியும்.

அப்பா, நான் வல்லமையுள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்தில்லே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (சங்கீதம் 19: 12-14)**

## மற்றவர்களை மன்னிப்பதற்கான ஜெபம்

எங்களை நேசிக்கிற பரமதகப்பனே, நான் காயப்பட்டு இருக்கிறேன். என்னால் (யாரை மன்னிக்கமுடியவில்லையோ அவரின் பெயர் குறிப்பிடவும்) என்னால் மன்னிக்க முடியாது என்று நினைக்கிறேன். இந்த சம்பவத்தை மறக்க எனக்கு கடினமாக இருக்கிறது. ஆனால் தேவனே என் இதயத்தில் இந்த மன்னிக்க முடியாமையை சுமந்து செல்ல நீர் விரும்பவில்லை என்று எனக்கு தெரியும். நான் உம்மிடம் நிறைய கற்று கொள்ள முடியும். நீர் உமது ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை என் பாவங்களையும் , என் நோய்களயும் நீக்குவதற்காக சிலுவையில் மரிக்க உலகத்துக்கு அனுப்பினீர். இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் என் பாவங்கள் மன்னிக்கபட்டது, என் எல்லா பாவங்களும் கழுவப்பட்டன. என்னுடைய முற்பாவங்களை இனி நினையாமலிருப்பேன் என்று சொல்லி இருக்கிறீர்.

ஆண்டவரே, மற்றவர்கள் மேல் நானும் இரக்கமும் கருணையும் காட்ட கற்ப்பிதருளும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் என்னை மன்னித்தது போல, மற்றவர்களை மன்னிக்க எனக்குப் போதியும்.

அப்பா, நான் வல்லமையுள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்திலே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (எபேசியர் 4:32, எபிரேயர் 10: 17)**

## பயத்திலிருந்து மீள பிராத்தனை

எங்களை நேசிக்கிற  பரம பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமம் பலத்த கோபுரம். நான் உம்மிடம் ஓடிவரும் போது பாதுகாப்பாக இருக்கிறேன். உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலிருக்கிறவர் பெரியவர்.எனக்கு பயமில்லை.

ஆண்டவரே, நான் உம்முடைய பிள்ளை. மற்றும் நான் பரிசுத்த ஆவியால் நடத்தபடுகிறேன். நான் பயப்பட ஒன்றுமில்லை. பரிசுத்த ஆவியானவர் என் ஆவியோடு இணைந்து நான் உமது பிள்ளை என்று உறுதிப்படுத்துகிறார்.

கர்த்தாவே, எல்லாம் உம்  பொறுப்பில், கட்டுப்பாட்டில் உள்ளன. எனக்கு பயப்பட ஒன்றுமில்லை, ஏனெனில்  நீர் என்னுடைய அப்பா, பிதா.

அப்பா ஆண்டவரே உமக்கு நன்றி. உமது சமாதானத்தால்  என்னை தொடந்து ஆசீர்வதியும். பிதாவே, மற்றவர்களும் தங்கள் பயத்தை மேற் கொள்ள உமது இரக்கத்திற்காகவும் , கிருபைக்காகவும் ஜெபிக்கிறேன்.

அப்பா, நான் வல்லமையுள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்தினாலே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (நீதிமொழிகள் 18:10, 1 யோவான் 4: 4, ரோமர்8: 14-16)**

## தேவனிடம் விசுவாசத்திற்காகவும் மற்றும் நம்பிக்கைகாக பிராத்தனை

ஆண்டவரே, என் பிராத்தனை நோக்கங்களுக்காக உம்மண்டை வருகிறேன். நீர் என் ஜெபத்தை கேட்கிறவர் என்று எனக்கு தெரியும். ஆண்டவரே நான் பலவீனமாக இருக்கும் தருணத்தில் என் மனதில் சந்தேகங்கள் ஏற்படுகின்றன. என் நம்பிக்கை பலவீனமாக இருக்கும் தருணங்கள் உண்டு. என் நம்பிக்கை பலவீனமாக இருக்கும் தருணங்களில் என்னை மன்னியும். என் அவநம்பிக்கையை மன்னியும்.

விசுவாசம் வேதவசனத்தை கேட்கும் போது வருகிறது. தயவு செய்து நான் உம்முடைய பரிசுத்த வார்த்தையாகிய வேதாகமத்தை (பைபிள்) வாசிக்கும்படி அதிக நேரம் செலவிட வேண்டும் என்று ஆசீர்வதியுங்கள் என் விசுவாசத்தை அதிகரிக்க செய்யும்.. விசுவாசம் என்பது நாம் எதிர்பார்ப்பது உண்மையில் நடக்கும் என்ற நம்பிக்கை. அது நாம் பார்க்க முடியாத விஷயங்களை பற்றி உத்தரவாதம்(உறுதி) அளிக்கிறது. உம் மேல் உள்ள நம்பிக்கை அதிகரிக்க என்னை ஆசீர்வதியும்.

நீர் எங்கள் ஜெபத்திற்கு  பதிலளிக்கும் அன்பான தேவன் என்று எனக்கு தெரியும். ஒரு வேளை நான் வேண்டிகொள்வது  எனக்கு நல்லதல்ல என்றால் எனக்கு எது சிறந்ததோ அதை எனக்கு ஆசீர்வதியும்.

பரிசுத்த ஆண்டவரே, எனக்கு  ஒரு பிரகாசமான எதிர்காலம் மற்றும் நம்பிக்கையும்  கொடுக்க, எனக்கும் என் வாழ்க்கைக்கும் பெரும் திட்டங்களையும், சமாதான திட்டங்களையும்  வைத்திருக்கிறீர், என்று உறுதியளித்திருக்கிறீர். நீர் எனக்கு வைத்திருப்பது இருப்பதிலேயே சிறந்த திட்டம் என்று நம்புகிறேன். உமக்கு கீழ்ப்படிய எனக்குப் போதியும்.

நீர் நம்பிக்கையின் தேவன். என்னை மகிழ்ச்சியினாலும் , அமைதியினாலும் முற்றிலும் நிரப்பும்படி வேண்டுகிறேன், ஏனெனில் நான் உம்மை நம்பி இருக்கிறேன். அப்பொழுது பரிசுத்த ஆவியின் சக்தியினாலே என்னில் உறுதியான நம்பிக்கை நிரம்பி வழியும்.

மேலும் நம்பிக்கையின்றி போராடும் மற்ற மக்களும் உம்மிடத்தில் உள்ள நம்பிக்கையின் ஒளியை அனுபவிக்க நான் பிராத்தனை செய்கிறேன்.

அப்பா, நான் இயேசுவின் நாமத்தினாலே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

**வேதம் குறிப்பு (ரோமர் 10:17, எரேமியா 29:11,ரோமர் 15:13, எபிரெயர் 11: 1)**

**அன்புக்கான ஜெபம் - இயேசுவின் அன்பினால் தீயவைகளை மேற்கொள்ளும் ஜெபம்**

எங்களை நேசிக்கிற பரம பிதாவே, அறிந்தோ, அறியாமலோ எங்கள் குடும்பங்களுக்கு தீமை செய்ய முயற்சித்தும், மற்றும் எங்களுக்கு கெடுதி செய்ய முயன்ற மக்களை ஜெபத்தில் உம்மண்டை கொண்டு வருகிறோம். பிதாவே, நீர் மற்றவர்களை மன்னிக்க எங்களுக்கு போதித்து இருக்கிறீர். எனவே இந்த ஒவ்வொரு மக்களையும் மன்னித்து, இவர்களுடைய சமாதானத்துக்காகவும், இவர்களுடைய வாழ்வின் வளத்துக்காக பிராத்திக்கிறோம். இவர்களை உம்முடைய கிருபையினாலும், சமாதானத்தினாலும், இரக்கத்தினாலும் ஆசீர்வதியும்.

கர்த்தராகிய இயேசுவே, நீர் இப்படிச் சொல்லியிருக்கிறீர்- "***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.***

***இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பரம பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்***."

ஆண்டவரே! நாங்கள் உமக்கு கீழ்ப்படிகிறோம். இந்த மக்களை உமது அன்பு சமாதானம், சந்தோஷத்தால் ஆசீர்வதிக்கும்படி பிரார்த்தனை செய்கிறோம். அவர்கள் உம்மை தெரிந்து கொண்டு, மிக தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ள வேண்டும். அப்பா, நான் வல்லமையுள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்தினாலே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

**(மத்தேயு 5: 44-45) வேதம் குறிப்பு**

**சரணடைவதற்கான ஜெபம் – தேவன் என் வாழ்க்கையின் பொறுப்பை எடுத்து கொள்ள அனுமதிக்கும் ஜெபம்.**

கர்த்தாவே, நீர் சொல்லியிருக்கிறீர், "***கேளுங்கள் அது உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்***". நான் இதோ, இருக்கிறேன் ஆண்டவரே . என் வாழ்வில் நீர் வரும்படி கேட்கிறேன். உம் சித்த்த்தை தேடுகிறேன் ஆண்டவரே. என் வாழக்கையை உம்மிடம் ஒப்படைக்கிறேன்.

ஆண்டவரே, என் வாழ்க்கையில் முதலிடத்தை உமக்கு தருகிறேன். என் வாழக்கையில் நீர் எனக்காக ஒரு சிறந்த திட்டத்தை வைத்திருப்பதை நான் அறிவேன் எனவே என் வாழக்கையின் பொறுப்பை ஏற்று கொண்டு கட்டுப்படுத்தும்.

நீர் எங்கள் பிராத்தனைகளுக்கு பதிலளிக்கும் எங்கள் அன்பார்ந்த தேவன் என்று எனக்கு தெரியும். ஒரு வேளை நான் வேண்டிகொள்வது எனக்கு நல்லதல்ல என்றால் எனக்கு எது சிறந்ததோ அதை எனக்கு ஆசீர்வதியும். பரிசுத்த ஆண்டவரே, எனக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் மற்றும் நம்பிக்கையும் கொடுக்க, எனக்கும் என் வாழ்க்கைக்கும் பெரும் திட்டங்கள், சமாதான திட்டங்கள் வைத்திருக்கிறீர் என்று உறுதியளித்திருக்கிறீர். நீர் எனக்கு வைத்திருப்பது இருப்பதிலேயே சிறந்த திட்டம் என்று நம்புகிறேன். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உம்முடைய நினைவுகளும் வழிகளும், என் நினைவுகளையும் வழிகளையும் பார்க்கிலும் உயர்ந்திருக்கிறது. உமக்கு கீழ்ப்படிய எனக்குப் போதித்தருளும். எனக்கு உமது வார்த்தையின் படியே ஆகட்டும்.

கர்த்தாவே,நான் உமது சத்தியத்தின்படி பிழைக்க, உமது வழியை எனக்குப் போதியும், உம்மை கனம்பண்ண சுத்தமுள்ள இதயத்தை எனக்கு தந்தருளும்.

அப்பா, நான் வல்லமையுள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்தினாலே பிராத்தனை செய்கிறேன். ஆமென்.

வேதம் குறிப்பு **(மத்தேயு 7: 7, சங்கீதம் 86:11, எரேமியா 29:11, லூக்கா 1:38, ஏசாயா 55: 9)**